DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.740/2024**

**P.W.1**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | வினோத்குமார் |
| Father Name | : | சுந்தரராஜன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.12.2025.
( 1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது மதுரை மாநகர் சி3 எஸ் எஸ் காலனி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.07.2024ம் தேதி அன்று காலை 07.15 மணிக்கு சி3 எஸ் எஸ் காலனி காவல்நிலைய **சாட்சி எண்.6** சார்பு ஆய்வாளர் திலீபன் அவர்களுன் போலீஸ் பார்ட்டிகளுடன் நான் மற்றும் முதல்நிலை காவலர் **சாட்சி எண்.2** செந்தில் குமார் 2291, மற்றும் முதல்நிலை காவலர் **சாட்சி எண்.3** பிரபாகரன் 1191 ஆகிய நாங்கள் நால்வரும் தேனி மெயின் ரோடு, விராட்டிபத்து, தாலுகா அலுவலகம் அருகே வாகனத்தணிக்கையில் ஈடுபட்டிருந்த போது, அவ்வழியாக மதுரையிலிருந்து நாகமலைபுதுக்கோட்டை நோக்கி வந்த TN 58 X 4209 என்ற பதிவு எண் கொண்ட வாகனம் எங்களை பார்த்ததும் திருப்பி செல்ல முயன்றார்கள். அப்போது நாங்கள் நால்வரும் அந்த வாகனத்தை மறித்து நிறுத்தினோம். அதில் இருந்தவர்களை சார்பு ஆய்வாளர் அவர்கள் விசாரிக்க முன்னுக்கு பின்னாக முரண்பட்டு பேசினார்கள். பின்னர் இறுதியாக சக்திவேல் வயது 43, த/பெ. மதுரை பாண்டி மற்றும் பாரதி வயது 29 த/பெ. கார்த்திகை சாமி என்பது விசாரணையில் தெரிய வந்தது. அதன் பின்பு அவர்கள் ஓட்டி வந்த வாகனத்தை நாங்கள் சோதனை செய்ததில் அதில் நான்கு

வெள்ளை நிற சாக்கு மூட்டைகள் இருந்தது. அவற்றை ஒன்றன் பின் ஒன்றாக கழற்றி பார்க்க ஒரு மூட்டையில் கணேஷ் புகையிலை பாக்கெட்டும், இரண்டவாது மூட்டையில் Cool Lip புகையிலையும், 3வது மூட்டையில் விமல் புகையிலையும் மற்றும் 4வது மூட்டையில் விமல் ஒன் புகையிலை பாக்கெட்டுகளும் இருந்தன. அவற்றை நாங்கள் முகர்ந்து பார்க்க நெடியுடன் கூடிய வாடை இருந்தது, அதனால் எங்களுக்கு மேலும் மயக்கம் மற்றும் வாந்தி வருவது போல் இருந்தது. மேலும் அவற்றை பற்றி சார்பு ஆய்வாளர் அவர்கள் விசாரிக்க 1 வது எதிரி சக்திவேல் என்பவர் தானாக முன்வந்து பெங்களூர் சிக் பேட்டையில் ஆள் அடையாளம் தெரியாத பெயர் மற்றும் முகவரி தெரியாத நபரிடமிருந்து புகையிலை பொருட்களை பெற்று வாங்கி அவற்றை மதுலை எல்லீஸ் நகர் DTDC பார்சல் சர்வீஸிற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் அவருக்கு நன்கு தெரிந்த உறவினரான ஆட்டோ ஓட்டுநர் 2வது எதிரி பாரதியுடன் பார்சல் சர்விஸில் இருந்து எடுத்து செல்லம்பட்டி கொண்டு சென்று விற்பனை செய்வதாக கூறினார். மேலும் கடந்த 16.07.2024ம் தேதி அன்று பெங்களூரில் இருந்த அடையாளம் தெரியாத நபரிடமிருந்து பெறப்பட்ட புகையிலை பொருட்களை மதுரை எல்லீஸ் நகர் DTDC பார்சல் சர்வீஸிற்கு அனுப்பி வைத்து அன்று காலை 06.00 மணிக்கு அதை எடுத்துகொண்டு செல்லம்பட்டி செல்வதாக தெரிவித்தார். பின்பு சார்பு ஆய்வாளர் **சாட்சி எண்.6** திலீபன் அவர்கள் குற்றத்தின் காரணத்தையும் தன்மையையும் கூறி 07.45 மணிக்கு எதிரிகளை கைது செய்தார். என்னை சார்பு ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

நான் காவல்துறையில் 15 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். வாகன தணிக்கை மற்றும் ரோந்து செய்வதில் எனக்கு அனுபவம் உள்ளது. எனது அன்றாட பணியை குறித்து வைப்பதற்கு ஒரு பாக்கெட் டைரி உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சங்கதியை நான் எனது பாக்கெட் டைரியில் குறித்து வைத்துள்ளேன். என்னை விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் மற்றும்

ஆய்வாளர் அவர்களிடம் பாக்கெட் டைரியை ஒப்படைத்ததேனா என்றால், எனக்கு ஞாபகமில்லை. நான் வருடத்திற்கு ஒருமுறை தான் காவல் நிலைய எழுத்தரிடம் பாக்கெட் டைரியை ஒப்படைப்பேன். சம்பவம் சம்மந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி ஆகியவற்றில் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் வாகன சோதனையில் ஈடுபட்ட போது வேறு வாகனத்தை தணிக்கை செய்தோமா என்றால், முதலில் இந்த வானத்தை தான் தணிக்கை செய்தோம். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் எஸ் எஸ் காலனி காவல்நிலைய சோதனை சாவடி உள்ளது என்றால், சரிதான், அங்கு கண்காணிப்பு கேமரா 24 மணிநேரமும் செயல்படும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகே அமைந்துள்ள தாலுகா அலுவலகத்தில் கண்காணிப்பு கேமரா உள்ளது என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தில் கைபற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களின் மாதிரியை இரசாயன பகுப்பாய்விற்கு எடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தில் கைப்பற்றபட்டதாக சொல்லப்படும் பொருட்களின் மூடைகளை பேக்கிங் செய்து போலீஸ் பட்டன் சீல் வைத்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு நான் செல்லவில்லை என்றாலும், என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூல மற்றும் அத்தாட்சி எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், சரியல்ல. சம்பவம் நடந்தாக சொல்லப்படும் காலை 07.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை பணியில் இருந்தேன். பணிக்கு நான் எப்போது சென்றாலும் காலையில் காவல்நிலையம் சென்று தான் இதர வேலைக்கு செல்வோம். எங்களின் உயர் அதிகாரி கேட்டுகொண்டதற்கிணங்க நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் எங்கு வைத்து தயார் செய்தார்கள் என்றால், 1வது எதிரியிடம் இருந்த பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி ஆகியவைகள் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. அதன் பிரிண்ட் அருகே உள்ள ஜெராக்ஸ்

கடையில் வைத்து எடுக்கப்பட்டது. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

S/d - S.John Sundarlal Suresh, B.Sc., M.L.,

IV Additional District and Sessions Judge, Madurai.